இதனால் பிடிபடும் மீன்களைப் பதப்படுத்தி விற்பனை செய்யவேண்டிய கருத்துரு ஏதும் பெறப்படவில்லை. அவ்வாறு கருத்துரு பெறப்படும்போது, இப்பகுதியில் மீன் பதப்படுத்தும் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பின், மாண்புமிகு அம்மா அரசினால் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.*

திரு. சி.எச். சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

3. அறிவிப்புகள்

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)–ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் மூன்றாவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக* (Panel of Chairmen) *நியமிக்கிறேன்.*

(1) திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்

(2) திரு. தங்க. தமிழ்ச்செல்வன்

(3) திரு. கே.பி. அன்பழகன்

(4) திரு. ஆர். சின்னசாமி

(5) திரு. எல். வெங்கடேசன்

(6) திரு. சு. குணசேகரன்